பக்கங்கள்: 13

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 18 புதன்கிழமை 03.01.2024 கதிர் 418

# முதலில் பொதுத் தேர்தல் அதுவே ரணிலின் திட்டம்

## சொல்கிறார் மரிக்கார் எம்.பி.

எதிர்க் கட்சிகளின் பரந்துபட்ட கூட்டணியைக் கண்டு அஞ்சும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலில் பொதுத் தேர்தலை நடத்தவே இப்போது திட்டமிடுகின்றார் என்று ஐக்கிய மக்கள்சக்தியின்நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியாக உள்ள ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதிதேர்தலில்போட்டியிடப் போவதில்லை. பொது ஜன பெரமுன சார்பில் தம்மிக்க பெரேராவேபோட்டியிடவுள்ளார். அதேநேரம்எமதுகட்சியின் ☞ 2

# இது ரகசியம் அல்ல!

பிறந்துள்ள புத்தாண்டு ஆளும் தரப்புக்குச் சோதனையான ஆண்டாகத்தான் சென்று முடியும் போலுள்ளது என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரங்கள். இந்த ஆண்டுஎப்படியும் தேர்தல் ஆண்டாக இருக்கும் என்று அறிவித்த நிலையில் வற் வரியை உயர்த்தியமை ஆளும் தரப்புக்குப் பாதகமாக முடிந்துவிட்டதாம்.

வற் வரி என்னவோ 3 சதவீதம்தான் உயர்த்தப்பட்டது என்றாலும் அத 18 சதவீதம் உயர்த்தப்பட்டமை போன்ற விம்பம் ஏற்படுத்தப்படுவதால் மக்கள் மத்தியில் அதன் தாக்கம் அதிகமாக உள்ளது என்றும் அதனைப் பயன்படுத்திக்கொண்டு தொழிற்சங்கங்கள் மீண்டும் போராட்டங்களில் குதிப்பதற்குத் தயாராகி விட்டன ☞ 2

# உயர்தரப் பரீட்சை நாளை ஆரம்பம்

கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நாளை ஆரம்பமாகவுள்ளது.

நிலவும் மழையுடனான வானிலை மற்றும் வெள்ள நிலைமை காரணமாக கெக்கிராவ மடாட்டுகம ரேவத வித்தியாலயத்திற்கான பரீட்சை மத்திய நிலையத்தை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த பாடசாலையில் உயர் தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்காக கல்கிரியாகம மத்திய ☞ 9

# ரணிலுக்கு எதிரான போராட்டங்களை தடுப்பதில் பொலிஸார் கடும் மும்முரம்

## 8 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ள நிலையில் அதற்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்படலாம் எனக்கருதிஎட்டுபேருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸாரினால்நேற்று இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம்உட்படவடக்குக்கு 4 நாள்கள் பயணமாக வரவுள்ளார். பல்வேறு கலந்துரையாடல்களில் பங்கேற்கவுள்ள அவர், ஜனவரி 4 முதல் 7ம் திகதி வரை வடக்கில் தங்கியிருப்பார்.

அவர் யாழ்ப்பாணத்தில் தங்கி இருக்கும்போதுஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கான போராட்டங்கள் இடம்பெறலாம் எனக் கருதியே பொலிஸார் போராட்டத்தை ஒழுங்குபடுத்தக் கூடியவர்கள் என்று கருதப்படும் 8 பேருக்கு எதிராகத் தடைகோரி பொலிஸார் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

இதுதொடர்பில் ☞ 9

# மேலும் 20 எம்.பிக்கள் விரைவில் சஜித்துடன் இணைவதற்குத் தயார்

## நாலக கொடஹேவா அறிவிப்பு

மேலும் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் இணைவதற்குத் தயாராக இருக்கின்றனர் என்று சுதந்திர மக்கள் சபையின் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்காருடன்இணைந்து செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இதனைத்வெளியிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சுதந்திர சபையின் ஆறு உறுப்பினர்களும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதெனத் தீர்மானித்துள்ளோம்.

அந்த வகையில் எமது முழுமையான ஆதரவினை நாம் சஜித் பிரேமதாசவுக்கு வழங்கியுள்ளோம். அதற்கான அறிவிப்பை நாம் ஏலவே செய்துள்ளோம். தற்போதைய நிலையில் எம்மைப் போன்று இன்னமும் 20 உறுப்பினர்கள் ☞ 8

# உள்நாட்டு இறைவரி ஆணையர் நியமிப்பு

உள்நாட்டுஇறைவரி ஆணையாளர்நாயகமாக டபிள்யு.ஏ.சேபாலிகா சந்திரசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் ஜனவரி முலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

சேபாலிகா சந்திரசேகர,1993ஆம்ஆண்டில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில்மதிப்பீட்டாளராக இணைந்து 30 வருடங்களுக்கும் மேலாகஅந்நிறுவனத்தில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளதோடு அவர் இதுவரை உள் நாட்டு இறைவரி திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றி வந்தார்.

# விவசாய நவீனமயப்படுத்தலுக்கான ரணிலின் யோசனைக்கு அனுமதி

விவசாயத் துறை நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் படிமுறைகளுக்காக அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

குறைப்பயன்பாட்டு வளங்களை இலங்கையில் விவசாயத் துறையில் வினைத்திறனாகவும் பயனுள்ள வகையில் பயன்படுத்தி நாட்டின் உற்பத்தியின் விளைதிறனைஅதிகரிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, விவசாயிகளின் வருமானம் மற்றும் விளைதிறனை அதிகரித்தல், சந்தைஒழுங்குறுத்துகை, ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட உற்பத்திகளை அதிகரித்தல், இளைஞர் சமூகத்தை ☞ 8

# பெரும் சுமையாக மாறிவிட்டுள்ள வரியை உடன் அகற்றவேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் ஆளும் தரப்புக்கு எச்சரிக்கை

மக்கள் மீது சுமையாக உள்ள வரியை உடனடியாக அகற்ற வேண்டும் என்று ஆளும் தரப்புக்குப் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வற்வரி அதிகரிப்பு தொடர்பில் கருத்துவெளியிடும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சியாளர்கள் மக்களின் குருதியை ☞ 2

# அனைவருக்கும் வரிக் கோப்பு பெப்ரவரி 1 முதல் கட்டாயம்

பெப்ரவரி முதலாம் திகதி முதல் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் வருமானவரிக்காகபதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவுவிடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வரி இலக்கத்தினைக்கொண்டிருப்பது அவசியமாகும். எனினும் அனைவரும் வரியைச் செலுத்த வேண்டியதில்லை. அதேநேரம், மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேல்ஊதியம்பெறுவோர் மாத்திரம் இந்த வரிக்கொள்கைக்கு உட்பட்டவர்கள்

எவ்வாறாயினும், நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பிக்கும் போதும், கட்டட நிர்மாணத்திற்கு அனுமதி கோரும் போதும், மோட்டார் வாகனமொன்றை பதிவு செய்யும் போதும், உரிமத்தை புதுப்பித்தல் மற்றும் காணி ☞ 2

# கொரோனாவின் புதிய திரிபு இலங்கைக்குள் பரவவில்லை

## ஒரு நோயாளிகூட கண்டறியப்படவில்லை என்கிறார் அமைச்சர்

இந்தியாவில் பதிவாகியுள்ள ஜே.என்-1 புதியகொரோனாபிறழ்வு தொடர்பில் சுகாதார அமைச்சுதொடர்ந்துஅதானத்துடன் இருப்பதாகவும், இதுவரை நடத்தப்பட்ட மாதிரிப் பரிசோதனைகளில் இலங்கையில் எந்த ஒரு நோயாளியும் பதிவாகவில்லை என்றும் கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பதிரண தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்நாட்டுமக்களுக்கு இலவசசுகாதாரசேவையின் கீழ், உயர் தரத்திலான மருந்துகளை வழங்கும் வேலைத் திட்டம் தொடர்ச்சியாக ☞ 8

# ஊழல் பணத்தை நாட்டுக்குத் திருப்பி கொண்டுவரும் வல்லமை இல்லையா?

## அரசிடம் எதிர்க் கட்சித் தலைவர் கேள்வி

ஊழல்செய்து வெளிநாடுகளில் பதுக்கிய பணத்தை திருப்பிக் கொண்டுவர இந்த அரசால் முடியவில்லையா என்றுஎதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கம்பஹாவில் நடைபெற்ற எதிர்க் கட்சியின் பிரபஞ்சம் செயற்றிடத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

புதிய வருடத்தில் நாட்டுமக்களுக்குஎங்கு திரும்பினாலும் வரி அதிகரிப்பு என்றதகவல்களையே கேட்பதற்கு நேரிட்டுள்ளது. தற்போதுவற்வரிஅதிகரிக்கப்பட்டுள்ளமையானது ஆளும் தரப்பினர் வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கான ஒரே வழியாக உள்ளது.

இந்த நாட்டில் திருடப்பட்ட ☞ 9

# போதை தடுப்புக் கட்டளைப் பிரிவு உருவாக்க விரைவில் நடவடிக்கை

## அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்க ஏற்பாடு

போதைப்பொருள் தடுப்பு, பெரும் கடத்தல்காரர்களைச் சிக்கவைப்பது உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக 'தேசியபோதைப்பொருள் தடுப்புக் கட்டளை' (போதைக்கு எதிரான கட்டளை) பிரிவு என்ற படையை உருவாக்குவதற்கான கூட்டு அமைச்சரவைப்பத்திரம் எதிர்வரும் வாரத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக் ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

வற் வரி உயர்வால் சில பொருட்களின் விலைகள் எக்கச்சக்கமாக அதிகரித்துள்ளன. குறிப்பாக மோட்டார் சைக்கிள் போன்றவற்றின் விலைகள் எகிறியிருக்கின்றன. இதுஏற்படுத்தும் மாயைமற்றைய பொருட்களுக்கும் அதபோன்ற அதிகரிப்பே இருக்கும் என்பதான தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதால் வற் உயர்வின் தாக்கம் பிரமாண்டமானதாக மக்கள் மனதில் பதிகின்றது என்கின்றன அந்த வட்டாரங்கள். அதனைத் தவிர்ப்பதற்கு ஆளும் தரப்பு அத்தியாவசியமான சில பொருட்களுக்கு வரி குறைக்கப்படுகின்றது என்று காட்ட முற்பட்டாலும் அது பயனற்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வற் வரியால் பொ-ருட்களின் விலைகளும் அதிகரிப்பதால் மக்கள் மனங்களில் ஆளும் தரப்புக்கு எதிரான உணர்வுகள் மீண்டும் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியுள்ளன. பாடசாலைப் புத்தகங்களுக்கும் வரியை அதிகரித்தமை அனைத்துத் தரப்பினரையும் தொடும் விடயமாகவும் அமைந்துள்ளதால் இந்த எதிர்ப்புணர்வு தீயாய் பரவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதுமட்டுமல்ல 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வரிக் கோப்பு எண்ணைப் பதிவு செய்திருக்கவேண்டும்என்றுஆளும் தரப்பு கட்டாயப்படுத்தியிருப்பதும் மக்கள் மனங்களில் அச்சத்தையும் எதிர்ப்புணர்வையும் ஏற்படுத்தியிருக்கின்றதாம்.

இன்றில்லாவிட்டாலும் நாளை தங்களுக்கும் வருமான வரி பிடிக்கவே ஆளும் தரப்பு இப்படிச் செய்கின்றது என்கிற அச்சம் இந்த நடவடிக்கையால் மக்களிடம் ஏற்பட்டிருக்கிறது. இந்த வரிக் கோப்புப் பதிவிற்கான அலைச்சலும் அவர்கள் ஒவ்வொருவரையும் பாதிக்கிறது. குறிப்பாக திறன் பேசிகளை (ஸ்மார்ட் போன்) பயன்படுத்தாத வயது மூத்தவர்கள் இன்னும் கணிசமானோர் இந்த நாட்டில் இருக்கின்றனர். வரிக் கோப்புக்கு இணையத் தளம் மூ-லம் பதிவு செய்யலாம் என்று ஆளும் தரப்பு அறிவித்தாலும், திறன்பேசி இல்லாத வயோதிபர்கள் தமது பதிவுக்கு தபால் மூலம் அல்லது பிரதேச செயலகம் மூலம் பதிவு செய்யவேண்டியிருக்கும். அல்லது ஒரு இணைய வசதி தொலைத்தொடர்புநிலையத்திற்குச் சென்று அந்தச் சேவையை வேண்டிப் பெறவேண்டி இருக்கும். இவையெல்லாம் வருமானமேயில்லாத தமக்கு தேவையற்ற தலையிடி என்று அவர்கள் கருத்துவதால் ஆளும் தரப்பின் இந்த நடவடிக்கையும் கடுமையான எதிர்வினையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றது.

இது எந்தளவிற்குத் தாக்கத்தைச்செலுத்தியிருக்கின்றது என்றால், காலைக்கதிரைத் தொடர்புகொண்ட மூத்தவர் ஒருவர் இது பற்றிப் பிரஸ்தாபித்தார். தன்போன்ற மூத்தவர்களை இப்படி அலையவிடாது, தேர்தல் பதிவேட்டைத் திருத்தவரும் கிராம அலுவலர் மூலமாக வரிக் கோப்புப் படிவங்களையும் ஒவ்வொருவருக்கும்விநியோகித்தால் இலகுவாக இருக்குமே என்று யோசனை தெரிவித்தார். அந்த அளவிற்கு இந்தக் காரியத்தை அவர் சிரமம் மிக்கதாகப் பார்த்தார்.

இப்படி வரிக் கோப்புப் பதிவு நடவடிக்கையும் மக்கள் மத்தியில் கடுமையான எதிர்ப்புணர்வைத் தோற்றுவித்திருப்பதால் அதனை எதிர்க் கட்சிகள் பயன்படுத்திக்கொள்வதில் குறியாக இருக்கும்என்றும்போராட்டங்களை எப்படியும்அடக்கிஒடுக்கவேஆளும் தரப்பு இந்தத் தருணத்தில் முயலும் என்பதால்அதுவும்ஆளுபவர்களுக்கு எதிரான உணர்வலைகளைக் கொழுந்துவிட்டெரிய வைக்கும் என்றும் சுட்டிக்காட்டும் அரசியல் வட்டாரங்கள், இவையெல்லாம் சேர்ந்து இந்த ஆண்டு தேர்தலுக்கு முன்பாக ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்டங்களைத் தீவிரப்படுத்தும் என்கின்றன.

அதற்குரிய தொடக்க நிலையாக தொழிற்சங்கங்கள் பலவும்கூடி பொருள்களின்விலையேற்றத்தைக் கண்டித்து போராட்டங்களில் உடனடியாகக் குதிப்பது என்று தீர்மானம் எடுத்திருக்கின்றனவாம். வற் வரியைக் குறைக்காவிட்டால் போராட்டம் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் ஏற்கனவே அறிவித்திருக்கின்றது. அதுபோன்றே மற்றைய பல தொழிற்சங்கங்களும் இதே கோரிக்கையை முன்வைத்து போராட்டம்நடத்தத்தயாராகிவிட்டன என்றும் இது நிலைமையை மோசமாக்கும் என்றும் இதனைச் சமாளிக்க ஆளும் தரப்புக்கு அடக்குமுறை ஒன்றைத் தவிர வேறு வழியில்லை என்பதால் அது ஆளும் தரப்புக்கு எதிரான பெரும் உணர்வுகளுக்கே வழி வகுக்கும் என்றும்கூட அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்--டுகின்றன.

தேர்தலை முன்வைத்துக்கொண்டு ஆளும் தரப்பு எடுத்த வரி அதிகரிப்பு நடவடிக்கை இங்கு எதிர்மறைவிளைவுக்கானவாசலைத் திறந்துவிட்டுள்ளது என்பதே அந்தத் தரப்புக்களின்கணிப்பு. அடுத்துவரும் நாட்கள் அதற்கானதாக இருக்கும் என்கிறார்கள்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

# போரை வென்ற மகிந்த பொருளாதாரத்தை வென்றெடுக்கவே ஜனாதிபதிக்கு ஆதரவு

## இப்படிச் சொல்கிறார் ஐ.தே.க. தவிசாளர்

போரைவெற்றிகொண்ட மஹிந்தராஜபக்சதற்போது நாட்டின் பொருளாதாரத்தை வெற்றிகொள்ளவே ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளித்து வருகிறார் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஐக்கியதேசியக்கட்சியின்தலைமையகத்தில்நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தற்போதைய நிலையில் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை ஆதரிப்பதன் மூலமே நாட்டை கட்டியெழுப்ப முடியும். ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடப் போகிறோம் எனத் தெரிவிப்பவர்களால் நாட்டில் என்ன செய்ய முடியும் என கேட்கிறோம். போரை வெற்றிகொண்ட மஹிந்த ராஜபக்ச தற்போது நாட்டின் பொருளாதாரத்தை வெற்றிகொள்ளவே ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளித்து வருகிறார்.

அடுத்துவரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதாக தற்போது பலரும் தெரிவித்து வருகின்றனர். இவ்வாறு தெரிவிப்பவர்கள் தேர்தலில் வெற்றிபெற்றால்அவர்களால்நாட்டின்பொருளாதாரத்தை கட்டியெழுப்பஎன்னசெய்யமுடியும்? இவர்களின்ஏமாற்று பேச்சுக்களுக்கு மக்கள் மீண்டும் எடுபட்டுவிடக்கூடாது.

அதேநேரம் போராட்ட காலத்தில் மொட்டு கட்சி மக்களுக்கு அடிபணிந்து செயற்பட்டபோதும் சர்வதேசத்தின் கோரிக்கைக்கைக்கு அடிபணியாமல் எடுத்த தீர்மானத்துக்கு நன்றி தெரிவிக்கிறோம். நாட்டில் தங்போது சர்வதேச நாணய நிதியம் உதவிகளை அளித்துள்ளது. ஏனைய பல சர்வதேச தரப்புக்களும் ஆதரவினை வழங்கிவருகின்றன.

இந்த நிலைமைகள் எல்லாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால்தான் ஏற்பட்டன. இதனை வேறு எந்த நபரால் எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்ல முடியும்? அவ்வாறான எவரும் இல்லை.

வெறுமனே விமர்சனங்களை முன்வைப்பதையும், எம்மையும் எமது பெற்றோரையும்கூட சமூக ஊடகங்களில் விமர்சிப்பதையுமே சிலர் நோக்காக கொண்டுள்ளனர்.

அதுபற்றிநாம்கவலைப்படவில்லை. இத்தருணத்தில் நாட்டை கட்டியெழுப்பக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான். அவரை எதிர்த்து போட்டியிட நினைப்பவர்களுக்கு தலையில் பிரச்சினை இருக்க வேண்டும்.

ரணில் விக்கிரமங்க உண்மையில் புண்ணியம் செய்தவர். ஏனென்றால் தற்போது தான் விக்டோரியா உள்ளிட்ட நீர்நிலைகள் நிரம்பி வழிகின்றன. இது அவர் செய்துள்ள புண்ணியத்துக்கு இயற்கை அளித்துள்ள பரிசாகும் என்றார்.

## முதலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் சஜித் பிரேமதாசவும் போட்டியிடவுள்ளார். அநுரகுமார திஸாநாயக்கவும் போட்டியிடவுள் ளார். அவர்களில் ஒருவரை மக்கள் ஆணை வழங்கி ஆட்சிக்கு அனுப்பு வார்கள்.நாம்அந்தஜனநாயகத்தினை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் தேர்தல் நடத்தாது காலம் தாழ்த்துகின்ற ஏதேச்சதிகார ஆட்சி முறைமையை எதிர்க்கின்றோம்.

மேலும், எமது கட்சியானது இன்னும் பரந்துபட்ட கூட்டணியை அமைக்கவுள்ளது. குறிப்பாக இன்னமும் பலர் எம்முடன் இணையவுள்ளனர். விசேடமாக ஊழல், மோசடிகள் அற்ற சிறந்த உறுப்பினர்கள் எம்முடன் இணைவர்கள். அவர்களை நாம் இணைத்துக்கொள்வதற்குரிய பணிகளை ஏற்கனவே முன்னெடுத்துள்ளோம்.

அதனால் தான் தற்போது ஜனாதிபதியும், ஐக்கிய தேசியக் கட்சியும் அச்சமடைந்துள்ளன. இதனால் அவர்கள் முதலில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு திட்டமிட்டு வருகின்றார்கள். ஆகவே முதலில் நடைபெறுவதுபொதுத்தேர்தல்தான். இதனால் ஐக்கிய தேசியக் கட்சி தான் பாதிக்கப்படப்போகின்றது.

அந்தக்கட்சிதற்போதுஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினருடன் காணப்படுகையில், அடுத்த தேர்தலுடன் அக்கட்சியானது ஒட்டுமொத்தமாக அரசியல் அரங்கிலிருந்து வெளியேற்றப்படும் என்றார்.

## அனைவருக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமையைப் பதிவு செய்தலின் போதும்வரிசெலுத்துனர்அடையாள இலக்கம்கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

www.ire.gov.lk எனும் இணையத்தள முகவரிக்கு பிரவேசிப்பதன் மூலம் 18 வயதிற்கு மேற்பட்டோர், வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு மேலதிகமாக உள்நாட்டு இறைவரி பிரதேச அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் இதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றுள்ளது.

## பெரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுஞ்சித் தம்மைப்பாதுகாத்துக் கொள்வதற்காகவே வற்வரியை அதிகரித்துள்ளது. மக்கள் மீது இரக்கமின்றி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. கல்வி உபகரணங்களுக்கும் வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுஆட்சியாளர்களின் கோர முகத்தினை வெளிப்படுத்தியுள்ளது.

ரணில்,ராஜபக்சஆட்சிஒருவிடயத்தினைநினைவில்வைத்துக்கொள்ள வேண்டும். 69 இலட்சம் மக்களின் ஆணைபெற்றகோட்டாபயவையே நாட்டை விட்டே விரட்டிய மக்கள் இன்னமும் இந்த நாட்டிக்குள்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களால் ரணில், ராஜபக்ச ஆட்சியாளர்களைக் கலைக்க முடியாது என்று எண்ணிவிட வேண்டாம்.

ஆட்சியாளர்களுக்கு நாம் பகிரங்கமான எச்சரிக்கயை விடுகின்றோம். மக்கள் மீது சுமையாக உள்ள வரியை உடனடியாக அகற்றவேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால் இந்த ஆளும் தரப்பு வீட்டுக்கே செல்ல நேரிடும். மேலும் ஆட்சியாளர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவே தற்போது வரிச்சுமையை மக்கள் மீது செலுத்தியுள்ளார்கள் என்றார்.

## போதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறது.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க விடுத்துள்ளபணிப்புரைக்குஅமைய, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நீதி அமைச்சு ஆகியன இணைந்து சட்டத்தில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குத் தேவையான அமைச்சரவைப் பத்திரத்தை உருவாக்கி, பெருவில் போதைப் பொருளைக்கடத்துபவர்களைக்கைது செய்வதற்கான விசேட அதிகாரங்களைக் கொண்ட 'தேசிய போதைப்பொருள் எதிர்ப்புக் கட்டளை' பிரிவை உருவாக்க எதிர்பார்த்திருக்கின்றனர் எனவும் கூறப்படுகிறது.







# தேசபந்து தென்னக்கோனை உடன் பதவியிலிருந்து நீக்குக

## சித்திரவதைக்கு எதிரான இலங்கை ஒன்றியம் வலியுறுத்தல்



உயர்நீதிமன்றத்தால் அண்மையில் வழங்கப்பட்ட தீர்ப்பை அடிப்படையாகக்கொண்டு பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சித்திரவதைக்கு எதிரான இலங்கை ஒன்றியம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு மிரிஹான பொலிஸ் நிலையத்தில் நபரொருவரைக் கைதுசெய்து தன்னிச்சையாகத் தடுத்து வைத்து, சித்திரவதைகளுக்கு உட்படுத்தியதன் மூலம் அவரது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருப்பதாகவும், எனவே அதற்குப் பொறுப்பாளிகளான தேசபந்து தென்னகோன் உள்ளிட்ட 4 பொலிஸ் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட நபருக்கு தமது சொந்தப்பணத்தில் தலா 5 லட்சம் ரூபாவை நட்டஈடாக செலுத்தவேண்டும் எனவும் கடந்த டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதனையடுத்து தேசபந்து தென்னகோன் பதில் பொலிஸ்மா அதிபராகப் பதவி வகிக்கக்கூடாது என வலியுறுத்தி சித்திரவதைக்கு எதிரான இலங்கை ஒன்றியத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களால் கட்டமைக்கப்பட்ட விதத்திலும், தொடர்ச்சியாகவும் மேற்கொள்ளப்பட்டுவரும் சித்திரவதைகள் மற்றும் மிகமோசமாக நடத்துதல் போன்றவற்றின் பின்னணியில், வழக்கொன்றில் கடந்த டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தால் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பு குறித்து நாம் விசேட அவதானம் செலுத்தியிருக்கின்றோம். பொலிஸ் திணைக்களத்துக்குள் நிலவும் கட்டமைக்கப்பட்ட வன்முறைகளை முடிவுக்குக்கொண்டு வருவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதில் இலங்கையின் கடந்தகால மற்றும் தற்கால அரசாங்கங்கள் தோல்வியடைந்திருக்கின்றன என்பதை இத்தீர்ப்பு மீள நினைவுறுத்தியிருக்கின்றது.

இலங்கை அரசமைப்பின் 11 ஆவது சரத்தின் பிரகாரம் நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் சித்திரவதைகளிலிருந்து விடுபடுவதற்கான உரிமையைக் கொண்டிருப்பதுடன், அவ்வுரிமையைப் புறக்கணிக்கமுடியாது எனவும் அரசமைப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே யுத்தம் உள்ளிட்ட எந்தவொரு அவசர நிலைமையாக இருந்தாலும், சித்திரவதைகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான உரிமையைக் கட்டுப்படுத்தவோ அல்லது மட்டுப்பாடு விதிக்கவோ முடியாது. மாறாக அனைத்து அரச அதிகாரிகளும் அவ்வுரிமையைப் பாதுகாத்து, மேம்படுத்தவேண்டுமென உத்தரவாதமளிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் உயர்நீதிமன்றத்தின் அண்மைய தீர்ப்பு தேசபந்து தென்னகோன் மிக மோசமான சித்திரவதைகளுடன் தொடர்புபட்டிருப்பதை உறுதிப்படுத்தியிருக்கின்றது. இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதியும், சட்டமா அதிபரும், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியது இன்றியமையாததாகும். உடனடியானதும், வலுவானதுமான நடவடிக்கையின் மூலமே சித்திரவதைகளை முற்றாக முடிவுக்குக்கொண்டு வருவதில் அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டை வெளிப்படுத்தவும், பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட அரச கட்டமைப்புக்கள் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்பவும் முடியும்.

அதேவேளை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதன் பின்னர் கடந்த டிசெம்பர் 17 ஆம் திகதி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆற்றிய உரையில் தேசபந்து தென்னகோனை பதில் பொலிஸ்மா அதிபரென வலியுறுத்திக் கூறியமை தொடர்பில் மிகுந்த கரிசனையடைகின்றோம். இலங்கைப் பிரஜையொருவரை சித்திரவதைக்கு உட்படுத்தியதாகத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும் நபரொருவரை அரச கட்டமைப்பின் உயர் பதவியில் வைத்திருப்பதை எந்தவொரு நடவடிக்கை மூலமும் நியாயப்படுத்தமுடியாது. சித்திரவதைகளுக்கு எதிராகக் குரலெழுப்பும் முதல் நபராக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் இருக்கவேண்டும் என்பதுடன், பொதுமக்கள் பாதுகாப்பு என்பது சித்திரவதைகளுக்கு உட்படாதிருப்பதற்கான சுதந்திரத்தையும் உள்ளடக்கியிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் அரச பதவிகளை வகிப்பவர்கள் பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கக்கூடியவகையில் செயற்படவேண்டும் என்ற கோட்பாட்டுக்கு மதிப்பளிக்குமாறும், உயர்நீதிமன்றத்தீர்ப்பில் குற்றவாளியாக அடையாளங்காணப்பட்டிருக்கும் நிலையில் உடனடியாக பதில் பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து விலகுமாறும் தேசபந்து தென்னகோனிடம் வலியுறுத்துகின்றோம்.

அதேபோன்று உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை அப்பதவியிலிருந்து உடனடியாக நீக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் வலியுறுத்துகின்றோம். அதுமாத்திரமன்றி அவரைப் பதவிநீக்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை நாடாளுமன்றம் முன்னெடுக்கவேண்டும். மேலும் இச்சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபரிடம் கோருகின்றோம் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (05)

# ரணிலைத் தவிர வேறு எவருக்குமே பொதுவேட்பாளராகும் தகுதி இல்லை

## ரங்கே பண்டார அடித்துக்கூறுகிறார்

ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராகக் களமிறங்குவதாக யார் தெரிவித்தாலும் தற்போதுள்ள செயற்பாட்டு அரசியலில் அதற்குத் தகுதியானவர் ரணில் விக்ரமசிங்கவைத் தவிர வேறு யாரும் இல்லை.

அத்துடன் ரணில் விக்ரமசிங்கவுக்கு பொதுஜன பெரமுன ஆதரவளிக்கும். அதற்காக அந்தக் கட்சியின் உறுப்புரிமையை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை இருக்காது என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாடு வங்குரோத்து அடைந்த போது நாட்டைப் பொறுப்பேற்க யாரும் முன்வரவில்லை. பல்வேறு காரணங்களைத் தெரிவித்துக்கொண்டு பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதில் இருந்து நழுவிச் சென்றவர்கள் தற்போது அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிடப்போவதாகத் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் நாடு வங்குரோத்து அடைந்தபோது, தனி நபராக இருந்துகொண்டு அந்தப் பொறுப்பை ரணில் விக்ரமசிங்க ஏற்றுக்கொண்டார்.

அதேபோன்று நாட்டைக் கட்டியெழுப்ப சில கஷ்டமான தீர்மானங்களைத் தைரியமாக முன்னெடுத்தார். அதன் காரணமாகவே நாட்டை வங்குரோத்து நிலைமையில் இருந்து மீட்டு, மக்கள் ஓரளவேனும் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியுமாகி இருக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் அனுபவம் மற்றும் சர்வதேச



நாடுகளுடன் அவருக்கும் இருக்கும் நீண்டகாலத் தொடர்புகள் காரணமாகவே இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமாகி இருக்கிறது.

இவ்வாறான நிலையில் அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகக் களமிறங்குவதற்கு தற்போதுள்ள அரசியல்வாதிகளில் ரணில் விக்ரமசிங்கவைத் தவிர தகுதியான வேறு யார் இருக்கிறார் எனக் கேட்கிறோம்.

அத்துடன் ரணில் விக்ரமசிங்க பொது வேட்பாளராகக் களமிறங்கினால் அவருக்கு அனைத்து மக்களும் ஆதரவளிப்பர் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது. பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றால், ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிப்பது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க முடியும் என அந்தக் கட்சியின் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

என்றாலும் இதற்கு முன்னர் பொது வேட்பாளராகப் பலர் களமிறங்கி இருக்கின்றனர். அப்போது நாங்கள் ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வந்திருக் கிறோம். அதேபோன்று அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க பொது வேட்பாளராகக் களமிறங்குவது நிச்சயமாகும். அது தொடர்பில் ஏனைய அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடி அவர்களின் அவர்களின் இணக்கப்பாட்டை எமக்குப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது. - என்றார். (05)

# தேசபந்து தென்னக்கோன் விடயத்தில் ஜனாதிபதி மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுகிறார்

## ஏர்மிஸா ரீகல் குற்றச்சாட்டு

தேசபந்து தென்னகோனுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குத் தவறுவதன் மூலம் ஜனாதிபதியும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும், அரசாங்கமும் சித்திரவதைகளிலிருந்து விடுபடுவதற்கு இலங்கைப் பிரஜைகள் கொண்டிருக்கும் அடிப்படை உரிமையை மீறுவதாக சட்டத்தரணியும், சிவில் சமூக செயற்பாட்டாளருமான ஏர்மிஸா ரீகல் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு மிரிஹான பொலிஸ் நிலையத்தில் நபரொருவரைக் கைதுசெய்து தன்னிச்சையாகத் தடுத்துவைத்து, சித்திரவதைகளுக்கு உட்படுத்தியதன் மூலம் அவரது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன எனவும், எனவே அதற்குப் பொறுப்பாளிகளான தேசபந்து தென்னகோன் உள்ளிட்ட 4 பொலிஸ் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட நபருக்கு தமது சொந்தப்பணத்தில் தலா 5 லட்சம் ரூபாவை நட்டஈடாக செலுத்தவேண்டும் எனவும் கடந்த டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதனையடுத்து பதில் பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து தேசபந்து தென்னகோன் நீக்கப்படவேண்டுமென சட்டத்தரணிகள் கூட்டிணைவு, சித்திரவதைக்கு எதிரான இலங்கை ஒன்றிணைவு உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்கள் வலியுறுத்தி வரும் நிலையில், இதுபற்றி சட்டத்தரணியும், சிவில் சமூக செயற்பாட்டாளருமான ஏர்மிஸா ரீகல் அவரது எக்ஸ் தளத்தில் (ருவிட்டர்) செய்திருக்கும் பதிவில் மேலும் கூறியிருப்பவை வருமாறு -

பொலிஸ்காவலின் கீழான சித்திரவதைகள் இலங்கையில் வழமையாக நடைபெறும் விடயமாக மாறிவிட்டது. இதனைத் தடுப்பதற்கோ அல்லது இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கோ பொலிஸார் தவறியிருக்கின்றனர் என உயர்நீதிமன்றம் மீளவும் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தரான தேசபந்து தென்னகோன் சித்திரவதைகளுடன் தொடர்புபட்டிருக்கிறார் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து 15 நாள்கள் கடந்துள்ளன.

ஆனால் உயர்நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரும் தேசபந்து தென்னகோன் தொடர்ந்தும் பதில் பொலிஸ்மா அதிபராகப் பதவி வகித்துவருகின்றார்.

பதில் பொலிஸ்மா அதிபருக்குரிய அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களை அவரிடமிருந்து மீளப்பெறுவதற்கான நடவடிக்கையோ அல்லது அவர் உள்ளடங்கலாக சித்திரவதைகளுடன் தொடர்புபட்டிருக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையோ எடுக்கப்படவில்லை.

மேற்குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுப்பதற்குத் தவறுவதன் மூலம் தேச பந்து தென்னகோனுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நீக்குவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருக்கும் ஜனாதிபதியும், பொலிஸாருக்குப் பொறுப்பான பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும், அரசாங்கமும் சித்திரவதைகளிலிருந்து விடுபடுவதற்கு இலங்கைப்பிரஜைகள் கொண்டிருக்கும் அடிப்படை உரிமையை மீறுகின்றனர்.

இவ்வாறு உரிய நடவடிக்கை எடுப்பதற்குத்தவறுவதன் மூலமும், சித்திரவதை சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளைப் பாதுகாப்பதன் மூலமும், பாதிக்கப்பட்ட தரப்பினருக்குரிய நியாயம் கிடைப்பதை உறுதி செய்யாதிருப்பதன் மூலமும் 'சித்திரவதைகளுக்கு முற்றிலும் இடமில்லை' என அரசாங்கம் கூறுகின்றமை பொய்யானதொரு விடயமே என்பது வெளிப்பட்டுள்ளது என்று அவர் அப்பதிவில் தெரிவித்துள்ளார். (05)

# மலையகத்தைச் சேர்ந்த இருவர் யாழில் தீ விபத்தில் சிக்கி சாவு

*யாழ்ப்பாணம் - பருத்தித்துறை முனைப் பகுதியில் களஞ்சியசாலையொன்றில் தீப்பற்றியதில் சம்பவ இடத்திலேயே இருவர் உயிரிழந்துள்ளனர்.*

*மேற்படி சம்பவம் செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளை கடற்றொழில் உபகரண களஞ்சியசாலை யில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.*

*மலையகத்தின் உடப்புசல்லாவ பிள்ளையார் லோமன் தோட்டத்தைச் சேர்ந்த வேலாயுதம் புவனேஸ்வரம் என்ற 46 வயதான ஒருவரும் வேலாயுதம் ரவி என்கிற 38 வயதானவருமே உயிரிழந்துள்ளனர்.*

*தீப்பற்றியமைக்கான காரணம் தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மெத்தனத்தின் விளைவு

தீர்வு முயற்சிகள் மீது கொழும்பு அரசு அக்கறையற்றிருப்பது தொடர்பில் தமிழ் மக்களின்எதிர்ப்புணர்வுஇதுவரையில்சரியான முறையில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கூற்றுப்படி 2026ஆம் ஆண்டில்தான் இனி மீண்டும்தீர்வுகுறித்தநகர்வுகள்இருக்கமுடியும் என்றுஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணியின் இணைத்தலைவரும்பேச்சாளருமானசுரேஸ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டியிருந்தாலும் இப்படித் தீர்வு காலதாமதமாகி வருவதற்கான எதிர்ப்பைத் தமிழ் மக்களிடமிருந்து பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் எவையும் தமிழ் அரசியல் தலைமைகளில் இருந்து வெளிப்படுத்தப்படவில்லை.

அரசுத் தலைவராகப் பதவியேற்றதும் தீர்வு விடயத்திற்கு முக்கியத்துவம் வழங்குவதாகக் காட்டிக்கொள்வதில் ரணில் அக்கறையோடு இருந்தார். அவர் முதலில் 2023 மாசி 4 சுதந்திர தினத்திற்குள் தீர்வு என்றார். அதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்து வரவில்லை என்றதும்அரசமைப்பின்13ஆவதுதிருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்றார். இவற்றில் எவற்றையும் அவர் நிறைவேற்றவில்லை என்றாலும் ஆட்சிக்கு வந்ததும் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது அவரது நிகழ்ச்சி நிரலில் முக்கியமான இடத்தைப் பிடித்திருந்தது. ஆனா–ல் பின்னர் தீர்வு முயற்சிக்கு முக்கியத்துவம் வழங்குவதை அவர் கைவிட்டுவிட்டார். இப்போது பொதுத் தேர்தல் முடிந்து ஒரு வருடத்திற்குள் தீர்வு என்று அந்த முயற்சிகளை ஒத்திவைத்துவிட்டார்.

இருந்தும் தமிழர் தரப்பிலிருந்து அதற்கு போதுமான எதிர்ப்புக்காட்டப்பட்டிருக்கவில்லை. அரசியல் தலைவர்கள் ஒருசில ஊடக அறிக்கைகளுடன் எதிர்ப்புக்கள் அடங்கிவிட்ட நிலையையே பார்க்க முடிகின்றது. தீர்வைத் தாமதப்படுத்துவது தமிழர்களின் விருப்புக்குரியதல்ல என்கிற உறுதியான செய்தி எதுவும் அரசியல் தலைமைகளுக்கு வழங்கப்பட்டதாக இல்லை. பிறந்திருக்கும் புதிய ஆண்டு தெற்கு அரசியல் களம் தேர்தலுக்கு தயாராகி வரும் நிலையில் இனி இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது அடுத்த தேர்தலுக்குரிய பேரம் பேசலில் ஒன்றாக மாறிவிடுமே அன்றி அதற்குரிய தனித்துவத்தை இழந்துவிடும்.

அரசுத் தலைவரின் வடக்குக்கான பயணத்தின்போதுகூடதீர்வைத்தள்ளிப்போடும் கொழும்பின் செயலை எதிர்த்து தமிழர்களின் உணர்வுகளைப் பதிவு செய்வதற்கான எந்த நடவடிக்கையிலும் மக்களை அணி திரட்டுவதில் தமிழ் அரசியல் கட்சிகள் அக்கறைகொள்ளவில்லை என்பது கவலைக்குரியது. இந்த மெத்தனம் தீர்வு முயற்சிகள் இன்னும் இன்னும் தாமதமாகிப் போவதற்கும் எதிர்காலத்தில் அது மதிப்பிழந்து போவதற்குமே வழிவகுக்கும்.

# ரணிலின் தந்திரம்



உபுல் யோசப் பெர்னான்டோ

2012ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, ஜனாதிபதி சட்டத்தரணிகளைத் தெரிவு செய்து வெளியிட்டபோது, ஓர் அதிர்ச்சித் தகவல் ஐக்கிய தேசியக் கட்சியை உலுக்கியது. இந்தப் பட்டியலில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் சிரேஷ்ட அமைச்சர் பால் பெரேராவின் மகன் ரொனால்ட் பெரேராவின் பெயரும் இடம்பெற்றமையே அந்த அதிர்ச்சிக்குக் காரணம். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ரணிலுக்கு எதிராக உட்பூசல் எழுந்தபோது ரணிலின் சட்ட ஆலோசகராகப் பணியாற்றியவர் ரொனால்ட் பெரேரா. கட்சியின் செயற்குழுவிலும் பதவி வகித்தவர். இந்த பரபரப்பான காலகட்டத்தில், ரணிலுக்கு எதிராகக் கட்சிக்குள் கிளர்ந்தெழுந்திருந்தவர்கள் கருஜெயசூரியவும் சஜித்தும் ஆவர். எனவே மஹிந் தவுக்கும் ரணிலுக்கும் இடையிலான அரசியல் ஏற்பாட்டின் விளைவாகவே ரொனால்ட் பெரேராவை ஜனாதிபதி சட்டத்தரணியாக மகிந்த நியமித்தார் என கருவும் சஜித்தும் தெரிவித்தனர். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ரணிலின் தலைமைத்துவத்தையும் எதி ர்கட்சித் தலைவர் என்ற பதவியையும் பாதுகாக்க ம ஹிந்த தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றார் என்று அவர்கள் வாதிட்டனர். ரொனால்ட் பெரேராவை ஜனாதிபதி சட்டத்தரணியாகப் பெயரிட்டமை தமது கூற்றை ஆதரிக்கும் சான்று என்று ஆதாரப்படுத்தினர்.

இப்போது ரணில் ஜனாதிபதியாகிய பின்னர் அதேபோன்றதொரு குண்டைப் போட்டுள்ளார். ஜே.வி.பி. சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் குமாரப்பெரும மற்றும் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்யா நவரத்ன ஆகியோர் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டமையே ரணில் போட்டுள்ள குண்டு.

பொதுவாக சட்டத்தரணிகள் சங்க வரலாற்றில் ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க அஞ்சாதவர்களே தலைவர் பதவியை வகிக்கின்றனர். மஹிந்த ஜனாதிபதியாக இருந்த சமீப காலங்களில் உதாரணங்களை கூறினால் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ச, உபுல் ஜயசூரிய. முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணையில் மஹிந்தவின் ஆட்சியைக் கவிழ்க்க சட்டத்தரணிகள் சங்கமே முதல் தாக்குதலைத் தொடங்கியது. அப்போது, மகிந்தவின் அரசை எதிர்த்து தமது சங்கத்துக்கு ஆதரவாக இலங்கை முழுவதும் இருந்து சட்டத்தரணிகள் திரண்டனர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த தோல்வியடைந்து மைத்திரி - ரணில் ஆட்சி அமைந்தபோது எதிர்க்கட்சிகளுடன் நெருங்கிய உறவைவைத்திருந்தயூ.ஆர்.டி.சில்வாசட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரானார். மைத்திரி - ரணில் ஆட்சி எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைத் துரத்தியடித்தபோது சட்டத்தரணிகளுக்கு ஆதரவாக நின்றார்.

மைத்திரி - ரணிலுக்குப் பின்னர் கோட்டாபய ஜனாதிபதியாகவும் சாலிய பீரிஸ் சட்டத்தரணிகள் சங்கத் தின் தலைவராகவும் பதவியேற்றனர். சாலியவும் எதிர்க்கட்சிகளுடன் தொடர்பு கொண்ட ஒரு வழக்கறிஞராக இருந்தார்.

மேலும் அவர் கோட்டா ஆட்சியின் ஜனநாயக விரோத முடிவுகளுக்கு எதிராக நின்றார். 'அரகலயா' வந்தபோது, அவரும் வழக்கறிஞர்கள் சங்கமும் அரகல போராளிகளுக்கு ஆதரவாக நின்றனர். நீதிமன்றங்களிலும் அவர்களுக்காக வாதாடினார்கள். ரணிலும் சாலிய பீரிஸும் முன்னாள் நண்பர்களாக இருந்த போதிலும், ஜனாதிபதியான பின்னர் ரணில் போராட்டத்தை அடக்கிய போது போராட்டக்காரர்களுக்காக சாலிய நின்றார்.

அரகலய செயற்பாட்டாளர்களை ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அகற்றுவதற்கு ரணில் முடிவெடுத்தபோது மத்தியஸ்தராக சாலி பீரிஸ் செயற்பட்டார். அவ்வாறு செயற்படும்போதே, போராட்டக்காரர்கள் மீது ரணிலின் இராணுவமும் பொலிசாரும் தாக்குதல் நடத்தியதை சாலியாவால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இதனால் ரணில் சாலியாவைத் தாக்க ஆரம்பித்தார். நாடாளுமன்றத்தில் சாலிய பீரிஸை ஓரிரு முறை அல்ல பலமுறை தாக்கினார் ரணில்.

சாலியாவுக்குப் பிறகு கௌசல்யா நவரத்ன சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரானார். அரகாலய காலத்தில் சட்டத்தரணிகள் சங்கம் ஆற்றிய பங்கு காரணமாக, ரணில் ஆட்சியின் அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை அந்தச் சங்கம் கௌசல்யா தலைமையிலும் முன்னெடுக்கும் என்று சிவில் அமைப்புகளும் பொதுமக்களும் எதிர்பார்த்திருந்த போதிலும், சட்டத்தரணிகள் சங்கத்தில் இருந்து அரசியல் செய்யப் போவதில்லை என கௌசல்ய அறிவித்தார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தும் நீதிமன்றத்தின் தீர்மானம் குறித்து ரணில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியபோதும், கௌசல்யவும் அமைதியாக இருந்தார். சட்டத்தரணிகள் சங்கமும் மௌனம் காத்தது.

ஆனால் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நீதிமன்றதின் செயற்பாட்டை விமர்சித்தபோது சட்டதரணிகள் சங்கம் அதற்கெதிராக நின்றது. தான் நியமித்த கிரிக்கெட் இடைக்கால குழுவிற்கு தடை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டபோது, விளையாட்டுத்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் அதனைக் கடுமையாக விமர்சித்தார். அது நீதிமன்ற அவமதிப்பு என்று கோபப்பட்ட சட்டத்தரணிகள் சங்கம், ரொானுக்கு எதிரான வழக்கை வாதிட முன்வந்தது. அதேபோன்று நாடாளுமன்றத்தில் நீதிபதிகளை ரொஷான் விமர்சிப்பது தவறு என்றும் சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கை வெளியிட்டது.

இருப்பினும் இந்தச் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயற்பாட்டில் விசனம் கொண்ட அதன் முன்னாள் தலைவரான சாலிய பீரிஸ் சட்டத்தரணிகள் கூட்டு என்ற தனி அமைப்பை உருவாக்கினார்.

தற்போது கௌசல்யா நவரத்ன ஜனாதிபதி சட்டத்தரணி பதவிக்கு விண்ணப்பித்து ஜனாதிபதியிடம் இருந்த அந்த அந்தஸ்தைப் பெற்றுள்ளார். கௌசல்ய கேட்டதை ரணில் வழங்கியுள்ளார். சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக கடமையாற்றும்போதே ஜனாதிபதியின் சட்டத்தரணி என்கிற மதிப்பையும் அவர் ஜனாதிபதியிடம் கோரினார் என்பதும் கவனத்திற்குரியது. மேலும், ஜேவிபியின் வளர்ந்து வரும் நட்சத்திரம் உபுல்

(7ஆம் பக்கம் பார்க்க...)

# மக்களின் சேவைகளுக்காகவே நாம் கூட்டணி அமைக்கின்றோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ திட்டவட்டம்



ஐக்கிய மக்கள் சக்தி பரந்த கூட்டணியை உருவாக்கி வருவது யாருக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கல்லவென்றும், சிறந்த கொள்கைகள் மற்றும் மக்கள் சேவையின் அடிப்படையிலையே இவ்வாறு இணைத்துக் கொள்வதாகவும், இதனைத் தவறாகப் புரிந்துகொண்டு அரசாங்கத்துடன் தொடர்புடைய சில ஊடகங்கள் பணத்தை பெற்றுக்கொண்டு மக்களை தவறாக வழிநடத்தும் வகையில் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் எந்த அமைச்சரும் சுகபோகங்களை அநுபவிக்க முடியாது என்றும், மிகவும் கடினமான வாழ்க்கையை வாழ்ந்து மக்களுக்கு தன்னலமற்ற சேவை ஆற்ற வேண்டும் என்றும், தேவையில்லாமல் வெளிநாட்டு பயணங்களில் சுற்றுவது போன்ற வழக்கமான பொழுதுபோக்குகளை அவர்களால் மேற்கொள்ள முடியாது என்றும், அமைச்சுப் பதவிகளில் விரக்தி மனப்பான்மை எழுந்தாலும் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் இவ்வாறான தியாகங்களைச் செய்ய வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மக்கள் பக்கம் நின்று பார்க்கும் போது புத்தாண்டு உதயமாகுவதில் தனக்கு சந்தோச நிலைப்பாடு எழுவதாக இல்லை என்றும், தானும் தனது குழுவும் நபர்களை அங்கிருந்து இங்கு இழுத்தெடுக்கும் விளையாட்டுகளையோ அல்லது ஆடம்பர ஹோட்டல்களில் இருந்து பணப் பைகளை பரிமாறிக்கொள்வதன் மூலம் நட்பு வட்டார முதலாலித்துவத்தை செயல்படுத்துவதற்கோ அல்லாமல் பொதுமக்களுக்கு சேவை ஆற்றும் நோக்கிலயே இந்த கூட்டணியை உருவாக்கும் பணிகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். தென் மாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ான் விஜேலால் டி சில்வா திங்கட்கிழமை ஐக்கிய மக்கள் சக்திக்கு தனது ஆதரவைத் தெரிவிக்க வந்து கட்சி உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார். (05)

# பெருந்தோட்டங்களில் 51 சதவீதமானோர் உணவுப் பாதுகாப்பின்மை நெருக்கடியில்

## உலக உணவுத்திட்டம் தகவல்

பெருந்தோட்டப்பகுதிகளில் 51 சதவீதமான குடும்பங்கள் உணவுப்பாதுகாப்பின்மைக்கு முகங்கொடுத்திருப்பதுடன், நாட்டின் ஏனைய பாகங்களுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்டப்பகுதிகளிலேயே அதிகளவானோர் இந்நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது.

இலங்கை கடந்த ஆண்டு முகங்கொடுத்த பொருளாதார நெருக்கடி நாட்டின் உணவுப்பாதுகாப்பு நிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. உலக உணவுத்திட்டமும், உணவு மற்றும் விவசாய அமைப்பும் இணைந்து 2022 ஆம் ஆண்டு மேமாதம் மேற்கொண்ட பயிர்ச்செய்கை மற்றும் உணவுப்பாதுகாப்பு மதிப்பீட்டு ஆய்வில் 28 சதவீதமானோர் உணவுப்பாதுகாப்பின்மைக்கு முகங்கொடுத்திருப்பதாகக்கண்டறியப்பட்டது. அதனையடுத்து மேற்படி இரு அமைப்புக்களாலும் கடந்த ஆண்டு மார்ச்சில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கை மற்றும் உணவுப்பாதுகாப்பு தொடர்பான இரண்டாம் மதிப்பீட்டு ஆய்வில் 17 சதவீதமானோர் உணவுப்பாதுகாப்பான்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டதுடன், அதற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றம் தென்பட்டது. அதன்மூலம் உணவுப்பொருள் நுகர்வின் அளவு மேம்பட்டது. இந்நிலையில் கடந்த ஆண்டு மார்ச்சில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு ஆய்வின்போது நேர்காணல்செய்யப்பட்ட 8,741 குடும்பங்களை அடிப்படையாகக்கொண்டு கடந்த ஆண்டு ஓகஸ்ட்-ஒக்ரோபர் மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் உலக உணவுத்திட்டத்தால் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாய்வின்பிரகாரம் குறித்த காலப்பகுதியில் 24 சதவீதமான குடும்பங்கள் ஓரளவு உணவுப்பாதுகாப்பின்மை நிலைக்கு முகங்கொடுத்திருந்தன. பின்தங்கிய மற்றும் நலிவுற்ற சமூகங்களைச்சேர்ந்த குடும்பங்கள் நாளாந்தம் உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைத்துக்கொண்டமையே இதற்குப் பிரதான காரணமாக அமைந்தது.

அதேபோன்று கடந்த ஆண்டு மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் உணவு சார்ந்த மாற்று உத்திகளைக் கையாளும் குடும்பங்களின் எண்ணிக்கை 14 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மேலும் பெருந்தோட்டப்பகுதிகளில் 51 சதவீதமான குடும்பங்கள் உணவுப்பாதுகாப்பின்மைக்கு முகங்கொடுத்திருப்பதுடன், நாட்டின் ஏனைய பாகங்களுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்டப்பகுதிகளிலேயே அதிகளவானோர் உணவுப்பாதுகாப்பின்மை நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with Vegetable - 1160/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும்

## பிரதமர் தினேஷ் குணவர்தன திட்டவட்டம்



நாம் இக்கட்டான சூழ்நிலையிருந்து விடுபட்டுள்ளோம். நிகழ்காலத்திலிருந்து எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கும் சவால் ஒன்றே தற்போது எமக்குள்ளது.

நாட்டைக்கட்டியெழுப்பஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச்செல்லும் வேலைத்திட்டங்களுக்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

புதுவருடத்தை முன்னிட்டு கொழும்பில் அமைந்துள்ள பிரதமர் அலுவலகத்தில் திங்கட்கிழமை சிறப்பு மத வழிபாடுகள் இடம்பெற்றதுடன்உத்தியோகபூர்வமாககடமை களை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்தில் நாமும் ஒரு பங்குதாரராக வேண்டும். நாம் கடுமையான சூழ்நிலைகளைக் கடந்துவிட்டோம். நிகழ்காலத்திலிருந்து எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கும் சவால் ஒன்றே தற்போது எமக்குள்ளது.

அரச உத்தியோகத்தர்கள் தொடர்பில் அரசாங்கம் பல்வேறு தீர்மானங்கள் எடுத்ததாகக் கூறப்பட்ட போதிலும் ஆயிரக்கணக்கான அரச ஊழியர்களை நாம் வீட்டுக்கு அனுப்பவில்லை. ஓய்வு பெற்றுள்ள, ஓய்வு பெறவுள்ளவர்களின் ஓய்வூதியங்களும் பறிக்கப்படவில்லை.

கொவிட் தொற்று மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியின் போது அதிலிருந்து மீள்வதற்கு எமது நட்பு நாடுகள் உதவின.

அவர்களின்நம்பிக்கையின்அடிப்படையில் ஜனாதிபதி ரணில், பிரதமர் என்ற வகையில் நான், அமைச்சரவை மற்றும் நாடாளும ன்றம் சவால்களை வெற்றி கொள்வதற்கான முழு முயற்சியில் ஈடுபட்டு, பல விடயங்களில் மக்கள் எம்மீது கொண்ட நம்பிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளோம்.

இந்தப்பின்னணியில்நம்நாட்டின்விவசா-யிகள் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையக்கூடிய நாட்டை உருவாக்க முடிந்துள்ளது.

மற்றையதுறைகளிலும்எமக்குஇருந்த நிதி நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து விடுபட வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அபிவிருத்தியடைந்த ஒரு வளமான நாட்டைக் கட்டியெழுப்ப வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றும் நடவடிக்கைகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவதுடன் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

நாம்கடந்தவருடத்தைப்போல்அல்லாமல் மிகுந்த தைரியத்துடன் நம்பிக்கையுடனும் பொறுப்புகளை நிறைவேற்றக் கூடிய ஒரு புதிய ஆண்டில் நுழைந்துள்ளோம். மனித வாழ்வில் பல விடயங்கள் மறந்து போகலாம்.

இருப்பினும் கஷ்டங்கள் மற்றும் கடுமை யான சூழ்நிலைகளைக் கடந்து எமது வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

முழு சமூகமும் எதிர்பார்க்கும் வள மான எதிர்காலத்தை அடைவதற்கான பாதையை மீண்டும் வலுப்படுத்து-வதற்காக நம்பிக்கையுடன் முன்னேறிச் செல்லவேண்டும். அதற்காக அரசாங்கத்தின் வழிகாட்டுதலின் அடிப்படையில் தாய்நாட்டின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப ஒன்றாகக் கைக்கோர்க்க வேண்டும். - என்றார்.(05)

## 14 வயது சிறுவன் உள்ளிட்ட மூவர் கைது பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டில்

யாழ்ப்பாணம்ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதி யில் பதின்ம வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகிய குற்றச்சாட்டில் 14 வயது சிறுவன் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்துறை பொலி-ஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கிய சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் 14 மற்றும் 16 வய-துடைய இரு சிறுவர்கள் மற்றும் 19 வயது இளைஞன் ஆகிய மூவரை கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களை விசாரணைக்கு பின்னர் ஊர்கா-வற்துறை பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய வேளை இரு சிறார்களையும் சிறுவர்சீர்திருத்தபள்ளியில்தடுத்து வைக்குமாறும் , இளைஞனை யாழ்ப்பாண சிறைச்சாலையில் விளக்கமறியலில்வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (05)

## ஐஸ்கட்டி விலை எகிறியது

மீன்களைப் பாது காப்பதற்காகப் பயன் படுத்தப்படும் ஐஸ்கட்டிகளின் விலை 100 ரூபாவால் அதி கரிக்கப்படுமென உற்பத்தி யாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அறுநூறு ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் ஐஸ்கட்டியின் விலை எழுநூறு ரூபாவாக அதிகரிக்கப்படுமென உற்பத்தியாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

வற் வரி அதிகரிப்பு காரணம ாக திங்கட்கிழமை முதல் ஐஸ்கட்டியின் விலை அதி கரிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது .

(05)




## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவசாயத் தொழிற்றுறையில் கவர்ந்திழுப்பதன் மூலம் விவசாய தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல் மற்றும் தகவல் தொழிநுட்பத்தை விவசாயத் துறையில் பயன்படுத்தல் போன்ற நோக்கங்களை அடைவதற்காக விவசாயத் துறையை துரிதமாக நவீனமயப்படுத்த வேண்டியுள்ளது.

அதன்படி, 2048 ஆண்டாகும்போது அபிவிருத்தியடைந்த இலங்கையைக் கட்டியெழுப்பும் பணிப்பொறுப்புக்கு விவசாயத் துறையின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக துறைசார் நிபுணர்களின் பங்கேற்புடன் தேசிய கொள்கை சட்டகமொன்றைத் தயாரித்தல்.

விவசாயத் துறை நவீனமயப்படுத்தலுக்கான செயலகமொன்றை ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நிறுவுதல், விவசாயத் துறை நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளை பயனுள்ள வகையிலும் நிலைபேறான வகையில் சரியான ஒருங்கிணைப்புடன் நடைமுறைப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் பிரதேச செயலகப்பிரிவு மட்டத்தில்'விவசாயத் துறைநவீனமயப்படுத்தல் சேவைகள் மற்றும் அறிவு மையத்தை' தாபித்தல் முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக கமநல அபிவிருத்திச் சட்டம் உள்ளிட்ட ஏனைய ஏற்புடைய சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளல் ஆகிய தொடர்பான ஜனாதிபதியின் யோசனைக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## மேலும் 20 ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஜித்துடன் கைகோர்ப்பதற்கு தயாராக உள்ளனர். ஆகவே வெற்றி நிச்சயமாகும் என்றார்.

இதேவேளை, கோட்டாபயவுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தமை மற்றும் வியத்மக அமைப்பின் தலைமைப் பதவியை வகித்து அவரின் வெற்றிக்காக உழைத்தமை சம்பந்தமாகவும் கொடஹேவா கருத்துக்களை வெளியிட்டார்.

அதன்போது, நாம் கோட்டாபயவை வெற்றிபெறச் செய்வதற்காக செயற்பட்டோம். ஆனால் அவர்கள் எமக்களித்த அமைச்சுக்கள் மற்றும் பொறுப்புக்களை ஆழமாகப் பார்க்கின்றபோது அந்த மாற்றத்தினை எம்மால் மேற்கொண்டிருக்க முடிந்திருக்கவில்லை.

இதனால் தான் பதவியைத் துறந்து நாம் சுதந்திரமாகச் செயற்படும் தீர்மானத்தினை ஆரம்பத்தில் அறிவித்திருந்தோம். ஆனால், தற்போது நாட்டின் உண்மையான மாற்றத்துக்காக தலைமையொன்று அவசியமாகின்றது. அதற்காக நாம் சஜித் பிரேமதாச தலைமையிலான கூட்டணியில் செயற்படவுள்ளோம் என்றர்

## கொரோனாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. கொவிட் நெருக்கடிக்குப் பிறகு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததால், ஒரு சில மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. தற்போது, நாட்டின் நிதி நிலை சீராக முன்னேறி வருவதால், அத்தியாவசிய மருந்துகளை பெற, அரசின் கொள்முதல் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

மருத்துவமனைகளுக்கு மருந்துப் பொருட்களைப் பெறுவதற்கான செயல்முறையை வெளிப்படையானதாக மாற்றும் நோக்கத்துடன், கொள்முதல் நடவடிக்கைகளை டிஜிட்டல் மயமாக்கத் தேவையான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக கொழும்பு மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகங்களின் கணனிப் பிரிவுகளின் ஆலோசனைகள் பெறப்படுகின்றன. அதன்படி, எதிர்காலத்தில் குறித்த கொள்முதல் நடவடிக்கைகளை

தொடர்ச்சி 9ம் பக்கம்....




# திருகோணமலையில் விபத்தையடுத்து இ.போ.ச. பஸ்ஸுக்கு தீ வைக்க முயற்சி!







திருகோணமலை பிரதேசத்தில் இ.போ.ச. பஸ் ஒன்றால் மோதப்பட்டு ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என திருகோணமலை பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர் திருகோணமலை பிரதேசத்தை சேர்ந்த 41 வயதுடையநபராவார். பிரதேசவாசிகள் குறித்த பஸ்ஸிற்குத் தீ வைக்க முற்பட்ட போது சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுப்படுத்தியுள்ளனர். இதனையடுத்து பஸ் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நிலையில் குறித்த பஸ், பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## திருகோணமலையில் 61 எரிபொருள் தாங்கிகளை அபிவிருத்தி செய்ய அமைச்சரவை அங்கீகாரம்

திருகோணமலை சீனன்குடா துறைமுகத்தின் மேற்புற தாங்கி திடலானது 99 தாங்கிகளைக் கொண்டமைந்துள்ளதுடன், 2022.01.03ஆம்திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டவாறு, அவற்றில் 61 தாங்கிகளை திருகோணமலை பெற்றோலிய முனைய தனியார் கம்பனிக்கு 50 வருடகாலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த 61 எரிபொருள் தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியவளக் கற்கைஉள்ளிட்ட அடிப்படைபடிமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த சாத்தியவளக் கற்கை மூலம் இந்தக் கருத்திட்டம் 16 ஆண்டுகளில் 07 கட்டங்களாக அபிவிருத்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், அதன் முதலாவது கட்டத்தின் கீழ் பொருளாதார ரீதியாகப் பயனுறுவாய்ந்த 09 தாங்கிகளை மறுசீரமைப்புச் செய்வதற்கும், கிட்டத்தட்ட 1.75 கிலோமீற்றர் தூர வீதியைப் புனரமைப்பதற்கும், ஏற்புடைய ஏனைய வசதிகளை நிர்மாணிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நிர்மாணித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும்ஒப்படைத்தல்எனும்வணிக மாதிரியைப் பின்பற்றுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, முதலாவது கட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு உத்தேச அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான முதலீட்டாளரைத் தெரிவு செய்வதற்காக, குறித்த பெறுகைச் செயன்முறையைக் கடைப்பிடிப்பதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)

## 50 அடி பள்ளத்தில் ஓட்டோ வீழ்ந்ததில் சிறுவர் உட்பட நால்வர் படுகாயம்

பலாங்கொடை - மனதுங்கந்த பிரதேசத்தில் ஓட்டோ ஒன்று 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து இடம்பெற்ற விபத்தில் சிறுவர்கள் உட்பட நால்வர் காயமடைந்துள்ளனர் என பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் பலாங்கொடை பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் பயணித்த ஓட்டோ 50 அடி பள்ளத்தில் உள்ள தேயிலை தோட்டம் ஒன்றில் வீழ்ந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களது நிலைமை கவலைக்கிடமாக இல்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த ஓட்டோ, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் இந்த விபத்து இடம்பெற்றிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## விசேட தேவையுடைய பிள்ளைகள் தொடர்பாக முக்கிய அறிவிப்பு

வலயக் கல்வி அலுவலகங்களில் விசேடதேவையுடைய பிள்ளைகளை பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

விசேட தேவையுடைய குழந்தைகளுக்கு முறையான கல்வியை வழங்கும் விதமாகவே குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த பிள்ளைகளை உரிய வயதில் பாடசாலைகளுக்கு முதலாம் தரத்திற்கு அனுப்புவது தொடர்பான பாடத்திட்டத்தையும் அமைச்சு தயாரித்து மதிப்பீட்டுக் குழுக்களுக்கு வழங்கியுள்ளதாகவும், கடுமையான ஊனமுற்ற குழந்தைகளுக்கு வீட்டில் கற்பிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும், அத்தகைய மூன்று குழந்தைகளுக்கு ஓர் ஆசிரியர் பணிக்கு அமர்த்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஒவ்வொரு வருடமும் சுமார் 7000 ஊனமுற்ற குழந்தைகள் பதிவாகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (05)

### எந்தவொரு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர் ஷான் விஜயலால் டி சில்வாவுடன் கூட்டிணைந்து நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் பரந்துபட்ட கூட்டணியொன்றை அமைத்துள்ளோம். அந்தக் கூட்டணியின் ஊடாக நாட்டுமக்களைப் பாதுகாக்கும் வேலைத்திட்டத்தினையே புதிய ஆண்டில் முன்னெடுக்க வேண்டும். அதுவே எமது இலக்காகும்.

ஷான் விஜயலால் டி சில்வா எம்முடன் இணைந்துகொண்டமை எமக்குப் பெரும் சக்தியளிக்கும் விடயமாகும். ஒன்றிணைந்த ஐக்கிய முன்னணியாகப் பயணிப்பதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம் என்றார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் பேசிய ஷான் விஜயலால் தெரிவித்ததாவது:

எனது அரசியல் வாழ்க்கையில் எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் முதற் தடவையாக பங்கேற்கின்றேன். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறவுள்ள சஜித் பிரேமதாசவுடன் இணைந்து செயற்படுவதானது, யுகத்துக்கான தேவையாகும்.

எனது அரசியல் பயணத்தில் மிகுந்த பொறுப்புக்கள் உள்ளன. அந்தப் பொறுப்பினை நிறைவேற்றுவதாக இருந்தால் ஐக்கிய மக்கள் சக்தியுடனான பயணம் உரிய வாய்ப்புக்களை வழங்கும் என்று நம்பிக்கை கொண்டுளேன் என்றார்.

### உயர்தரப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகாவித்தியாலயத்தில் புதிய பரீட்சை மத்திய நிலையத்தை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இம்முறை உயர்தரப் பரீட்சைக்காக முதல் முறையாக கொரிய மொழி பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பரீட்சை அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள், பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக அதனை தரவிறக்கம் செய்ய முடியுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு 346,976 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். இவர்களில் 281,445 பேர் பாடசாலை மாணவர்கள் என்பதுடன், 65531 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் என்பதோடு, இம்முறை நாடளாவிய ரீதியில் 2,258 பரீட்சை மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

### ஊழல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணமும், வளங்களும், வெளிநாடுகளில் பில்லியன் கணக்கான டொலர்களில் இருப்பதாக தற்போதைய நிதி அமைச்சர் விஜதாச ராஜபக்சவே தெரிவித்துள்ளார்.

அப்படியிருந்தும் திருடர்களைக் கைது செய்து அவர்கள் திருடிய நிதியை மீள நாட்டுக்கு பெற்றுக்கொடுப்பதற்கான இயலுமை இன்றைய ஆளும் தரப்புக்கு இல்லையா என்ற கேள்வி எமக்கு உள்ளது.

ஊழலால் ஏற்பட்ட இழப்புகளை 225 இலட்சம் மக்களின் தோள்களிலும் சுமத்தாது, அத்திருடர்களைப் பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு ஏன் ஆளும் தரப்பினால் இயலவில்லை. திருடர்களிடமிருந்து பணத்தைப் பிடுங்கி மக்களை வாழவைப்பதற்கு ஏன் இயலவில்லை? இதற்காக ஆளும் தரப்பு என்ன நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இதுபற்றி ஏன் அமைதியாக உள்ளார்கள் என்றார்.

### கொரோனாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிஜிட்டல் மயமாக்கல் மூலம் மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் ஔடதக் கட்டுப்பாட்டு அதிகார சபையின் தர ஆய்வு கூடத்தை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். அதன் கொள்திறன், மனித வளம் மற்றும் அதன் கட்டமைப்பு மாற்றங்களை இந்த வருடத்தில் மேற்கொள்ள முடியும்.

இந்நாட்டுக்குத் தேவையான 850 வகையான அத்தியாவசிய மருந்துவகைகள் இனங்காணப்பட்டுள்ளன. அந்த மருந்துகளில் மக்களின் உயிர் காக்கும் அனைத்து மருந்துகளும் எங்களிடம் உள்ளன. கண்களுக்குத் தேவையான லென்ஸ்கள், இதய நோயாளிகளுக்கான அறுவை சிகிச்சை உபகரணங்கள் (ஸ்டென்ஸ்), எலும்பியல் அறுவை சிகிச்சை உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் தொடர்பில் நாம் அதிக கவனம் செலுத்தியுள்ளோம்.

கடந்தவருடம் டெங்குநோயினால் 50 பேர் உயிரிழந்துள்ளனர். இது மிகவும் கவலையான நிலை. டெங்கு நோயை அரசாங்கத்தினால் மாத்திரம் கட்டுப்படுத்த முடியாது. அதற்கு ஒட்டுமொத்த சமூகத்தின் ஒத்துழைப்பும் இருக்க வேண்டும். அத்துடன், பாதுகாப்புப் படை உறுப்பினர்களின் உதவியுடன் சூழல் சுத்திகரிப்பு வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முடிந்தவரை சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தலாம்.

தட்டம்மை நோயை ஒழித்துள்ள நாடாக உலக சுகாதார ஸ்தாபனம் இலங்கையை அடையாளங்கண்டுள்ளது. ஆனால் கடந்த வருடம் சுமார் 700 அம்மை நோயாளர்கள் பதிவாகியுள்ளமை தொடர்பில் சுகாதார அமைச்சு விசேட கவனம் செலுத்தியுள்ளது.

சில காரணங்களால், தட்டம்மை நோய்க்கு எதிரான நோய் எதிர்ப்புச் சக்தியின் அளவு குறைவாக உள்ளதால் தற்போது நாட்டில் மீண்டும் தட்டம்மை நோய் ஏற்படுவதாக நம்பப்படுகிறது. எனவே, இந்த நிலையை கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

அதன்படி, ஜனவரி மாதம் இரண்டாவது வாரத்தில் இருந்து நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்கள் ஊடாக நோய்த்தடுப்பு தடுப்பூசியை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தட்டம்மை நோயை தடுக்கும் வகையில் குழந்தைகளுக்கு தேவையான தடுப்பூசிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பேற்றோரை கேட்டுக் கொள்கிறோம்.

இது தவிர, இந்தியாவில் பதிவாகிவரும் புதிய துஹறி1 கொவிட் பிறழ்வு குறித்து இந்நாட்களில் எமது நாட்டிலும் கருத்தாடல் இடம்பெற்று வருகின்றது. தற்போது உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளபடி, இது தொடர்பாக தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம். துஹறி1 கொவிட் பிறழ்வு குறித்து சுகாதார அமைச்சு தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆதரவுடன், இது தொடர்பாக மாதிரி சோதனைகள் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில், இந்தியாவில் பதிவாகியுள்ள புதிய கொவிட் பிறழ்வு கொண்ட நோயாளிகள் யாரும் பதிவாகவில்லை. ஆனால் கடந்த கொவிட் காலத்தில் பின்பற்றப்பட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு பொதுமக்களை கேட்டுக் கொள்கிறோம்.' என்றார்.

### ரணிலுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் தரப்பு நிலைப்பாட்டினை நேரடியாகவோ, சட்டத்தரணி ஊடாகவோ யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில், இன்று முன்வைக்குமாறு அந்த 8 பேருக்கும் நீதிமன்றம் அழைப்பாணை வழங்கியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், தவத்திரு வேலன் சுவாமிகள், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க பிரதிநிதிகள் என 8 பேருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# பெறுமதிசேர் வரி அதிகரிப்பால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் படிப்படியாகக் குறைவடையும்

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க ஆறுதல்

பெறுமதிசேர் வரி அதிகரிப்பால் பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்கின்றோம். எனினும் இதனால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டின் பின்னர் படிப்படியாகக் குறைவடையும்.

எனவே கடந்த ஆண்டைப் போன்று இவ்வாண்டும் மக்கள் அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இந்த கோரிக்கையை முன்வைத்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

2023, மூன்றாம் காலாண்டிலிருந்து பொருளாதார வளர்ச்சி வேகமானது நேர்மறையாகியுள்ளது. அதற்கமைய 2022 இல் மறை பெறுமானத்துக்கு வீழ்ச்சியடைந்த பொருளாதார வளர்ச்சி வேகம் 2023 இல் சராசரியாக 3 வீதத்தால் அதிகரித்துள்ளது.

அத்தோடு சர்வதேச நாணய நிதியத்தால் இரண்டாம் கட்ட கடன் தொகை அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற 337 மில்லியன் டொலர், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைக்கப் பெற்ற 220 மில்லியன் டொலர் மற்றும் உலக வங்கியிடமிருந்து கிடைக்கப் பெற்ற 250 மில்லியன் டொலர் என்பவற்றுடன் தற்போது 4 பில்லியன் டொலருக்கும் அதிக அந்நிய செலாவணி இருப்பைப் பேண முடியும் என்ற இலக்கை அண்மித்துள்ளோம்.

கடந்த ஆண்டு 70 சதவீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் தற்போது 5 வீதத்தை விடவும் குறைவடைந்துள்ளது.

புதிய வரி திருத்தத்துக்கமைய பணவீக்கத்தை 5 சதவீதமாகப் பேணுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

கடந்த ஆண்டு 2857 பில்லியன் ரூபா வருமானம் எமது இலக்காகக் காணப்பட்ட போதிலும், 3110 பில்லியன் ரூபா வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

அந்த வகையில் இவ்வருடம் தேசிய உற்பத்தி வருமானம் 11.2 சதவீதமாக அதிகரிக்கும் அதே வேளை, 2026 இல் தேசிய வருமானம் 15 சதவீதம் வரை உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2019 இல் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை 1.7 மில்லியன் ஆகும். ஆனால் இந்த எண்ணிக்கை 2021 இல் 5 லட்சத்து 7000 ஆகவும், 2022 இல் 4 லட்சத்து 37500 ஆகவும் வீழ்ச்சியடைந்தது.

அதன் பின்னர் முன்னெடுக்கப்பட்ட மறுசீரமைப்புக்களின் அடிப்படையில் சுமார் ஒரு மில்லியனால் இந்த எண்ணிக்கையை அதிகரிக்க முடிந்தது.

அந்த வகையில் இவ்வாண்டு பொருளாதார வளர்ச்சி வேகத்தை 1.8 - 2 வீதம் வரை அதிகரிக்க முடியும் என்று நம்புகின்றோம்.

இந்த இலக்கை அடைவதற்காக பெறுமதிசேர் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதால், மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பை குறைப்பதற்காக அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளும் பயனாளர்களின் எண்ணிக்கையை அதகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது சுமார் 14 லட்சத்து 10000 பேருக்கு அஸ்வெசும வழங்கப்படுகிறது. இதனை செலுத்துவதில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு, இம்மாத இறுதியில் அல்லது பெப்ரவரியில் இவ்வாண்டுக்கான விண்ணப்பம் கோரப்படவுள்ளது.



சரியான நிதி முகாமைத்துவத்தைப் பேணி இலக்கை வெற்றி கொள்ளாமல், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு வேலைத்திட்டங்களையும் மீளப்பெறவோ மாற்றவோ முடியாது.

எவ்வாறிருப்பினும் தற்போதுள்ள இந்த பொருளாதார நெருக்கடிகள் அனைத்தும் இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டின் பின்னர் படிப்படியாகக் குறைவடையும். எனவே இது தொடர்பில் விமர்சிப்பதற்கு எதிர்க்கட்சிகளுக்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது.

கடந்த ஆண்டைப்போன்று இவ்வாண்டும் மக்கள் முழுமையாக ஒத்துழைப்புக்களை வழங்கினால் எம்மால் விரைவில் இந்த சுமைகளிலிருந்து மீள முடியும். - என்றார். (05)

# வரி அதிகரிப்பின் பாதிப்பைக் குறைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கிறாராம்

## ரங்கே பண்டார தெரிவிப்பு

அதிகரிக்கப்பட்டிருக்கும் வற் வரி தொடர்பில் மக்கள் குழப்பமடையத் தேவையில்லை. மக்களுக்கு ஏற்படும் கஷ்டத்தை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கையை ஜனாதிபதி எடுத்து வருகிறார். அதற்காக மக்கள் அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் பிரகாரம் நூற்றுக்கு 15 ஆக இருந்த வற்வரி ஜனவரி முதல் நூற்றுக்கு 18 ஆக அதிகரிக்கப்படுகிறது.

இதனால் மக்களுக்கு பொருளாதார ரீதியில் பாதிப்பு ஏற்படுகிறது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். என்றாலும் வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இந்தக் கஷ்டத்தை அனைவரும் சிறிது காலத்துக்காவது ஏற்றுக்கொள்ளவேண்டி இருக்கிறது.

இதனால் மக்களுக்கு ஏற்படுகின்ற அழுத்தத்தைக் குறைப்பதற்கு சில நிவாரண நடவடிக்கைகளை நிதி அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

அத்துடன் வற் வரி அதிகரிப்பு தொடர்பில் எதிர்க்கட்சி பொய் பிரசாரம் மேற்கொண்டு மக்களைக் குழப்பி வருகிறது. இது தொடர்பில் மக்கள் குழப்பமடையத் தேவையில்லை.

மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களுக்கான வரி அதிகரிப்பை இல்லாமல் செய்வது தொடர்பில் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

மக்களை கஷ்டப்படுத்த ஜனாதிபதிக்கோ அரசாங்கத்துக்கோ விருப்பம் இல்லை. என்றாலும் சிறிது காலத்துக்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

மேலும் வற்வரி அதிகரிப்பின் மூலம் ஒரு குடும்பத்துக்கு 40 ஆயிரம் ரூபா மேலதிக செலவு ஏற்படுவதாக சிலர் பிரசாரம் செய்து வருகின்றனர். அதில் எந்த உண்மையும் இல்லை.



தற்போது அதிகரிக்கப்பட்டிருக்கும் வரியில் இருந்து மருந்துப் பொருள்கள் உள்ளிட்ட 65 பொருள்களை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

அத்துடன் நாட்டின் தேசிய வருமானம் 2023 இல் 3 ஆயிரம் பில்லியனை தாண்டி இருக்கிறது. அதேநேரம் அரச அடிப்படை கணக்குகளில் மேலதிக நிலுவை ஏற்பட்டிருக்கிறது.

அதேபோன்று பல வருடங்களுக்கு பின்னர் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி முதல் காலாண்டுக்கு ஆரம்பத்திலேயே வழங்கப்பட்டிருக்கிறது. இவை அனைத்துக்கும் ஜனாதிபதியின் சிறந்த நிதி முகாமைத்துவமே காரணமாகும்.

கடந்த 25 வருடங்களாக நாட்டின் தலைவர்களாக இருந்து மேற்கொண்ட விடயங்களையும் கடந்த ஒன்றரை வருட காலத்தில் ரணில் விக்ரமசிங்க நாட்டின் தலைவராக இருந்து மேற்கொண்ட நடவடிக்கைகளையும் ஒப்பிட்டு பார்க்கையில், வித்தியாசத்தை புத்தியுள்ள மக்கள் விளங்கிக்கொள்வார்கள். - என்றார். (05)

# வன்செயல்களால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சியில் குடியேறியவர்கள் அந்த பிரதேச மக்களே ஆவர்

## முன்னாள் எம்.பி சந்திரகுமார் சுட்டிக்காட்டு

நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களால் பாதிக்கப்பட்டு மலையகம் உட்பட தென்னிலங்கையிலிருந்து கிளிநொச்சிக்கு குடிபெயர்ந்து கிளிநொச்சியில் 50 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகின்ற மக்கள் கிளிநொச்சி மக்களே. அவர்களை அரசியல் மற்றும் இதர நோக்கங்களுக்காகப் பிரித்துக் கையாளக்கூடாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சியில் இடம்பெற்ற மலையகம் 200 நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி வாழ்கின்ற இந்திய வம்சாவளி மலையக மக்கள் என்பது அவர்களது அடையாளமாக இருந்தாலும் அவர்கள் இப்போது கிளிநொச்சி மக்களே.

கடந்த காலங்களில் இவர்கள் பல்வேறு பாரபட்சங்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்தாலும் தற்போது அந்த நிலைமை பெருமளவுக்கு மாற்றப்பட்டுள்ளது. கிளிநெச்சியில் சுமார் 45 சதவீத மலையக மக்கள் வாழ்கின்ற போதும் அவர்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவம் போதுமான அளவு வழங்கப்படவில்லை. ஆனால் எமது கட்சியான சமத்துவக்கட்சி அந்த நிலைமையை மாற்றியது நாங்கள் உரிய பிரதிநிதித்துவத்தை வழங்கினோம். மீள்குடியேற்றத்திற்கு பின்னரான காலப்பகுதிகளில் அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்களில் முக்கியத்துவத்தை வழங்கினோம், கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற மத்திய வகுப்புத்திட்டக் காணிகளில் காணி உரிமையற்று நீண்ட காலமாக வாழ்ந்து வந்து மக்களுக்கு அந்தக் காணிகளின் உரிமைகளை சட்டரீதியாக பெற்றுக்கொடுத்தோம்.

தர்மபுரம் போன்ற கிராமங்களில் குளங்களின் கீழான நீர்ப்பாசன உரிமைகளை பெற வழி சமைத்தோம், நான் அதிகாரத்தில் உள்ள போது அனைவரையும் சமத்துவத்தோடு நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் செயற்பாடுகளை முன்னெடுத்தோம் எனத் தெரிவித்த அவர் இன்றும் மலையகத்தில் காணப்படுகின்ற லயன் வாழ்க்கை ஒரு கவலைக்குரிய விடயம். இந்த வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (05)

# ரணிலின் தந்திரம்.........

*குமாரப்பெருமவும் ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டமை ஜேவிபிக்குள்ளேயே பல சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.*

*ரணில் மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி அல்ல என்பதே ஜே.வி.பியின் நிலைப்பாடாகும். அத்தகைய ஜனாதிபதியிடம் இருந்து ஜனாதிபதி சட்டத்தரணி என்ற மதிப்பைப் பெற உபுல் குமாரப்பெரும விடுத்த கோரிக்கை ஜே.வி.பி. சமூக ஊடக ஆர்வலர்கள் சிலரிடமிருந்து கடுமையான விமர்சனங்களைப் பெற்றுள்ளது. "அநுர ஜனாதிபதியாக வருவதற்கு இன்னும் 200 நாட்கள் உள்ளன. அந்த நாட்களை உபுலால் ஏன் தாங்க முடியவில்லை?" என்று அவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். மஹிந்த,- ரணில்,- சஜித் எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்று ஜே.வி.பி. கூறுகின்றது. அதனால் இவர்களில் யாருடனும் அவர்கள் சேர்வதற்குத் தயாராக இல்லை. அதுமட்டுமல்ல, ராஜபக்சக்களுக்கு விசுவாசமாக இருந்ததால் டலஸ் அழகப் பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையையும் அவர்களை வெறுக்கிறார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் அவர்கள் ஐக்கிய மக்கள் சக்தி ரணிலின் வாலில் தொங்குவதாகவும், இனிவரும் காலங்களில் ரணிலின் கரங்களை பலப்படுத்துவார்கள் என்றும் கூறுகின்றனர் அப்படிப்பட்ட ஜேவிபியின் முக்கிய பிரமுகர் ஒருவர் ரணிலிடம் இருந்து ஜனாதிபதி சட்டத்தரணி என்ற மதிப்பை பெற்றுள்ளதை அக்கட்சியின் சமூக ஊடக ஆர்வலர்கள் சிலரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.*

*ஜனாதிபதி சட்டத்தரணி பதவிக்கு உபுல் குமாரப்பெரும பொருத்தமானவர் எனவும் அவருக்கு உரிய இடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜே.வி.பியின் சமூக ஊடக ஆர்வலர்களில் வேறு சிலர் தெரிவிக்கின்றனர். "அப்படியானால் ரணில் சரியான நபருக்கு உரிய இடத்தைக் கொடுக்கிறார் என்று அர்த்தமா...?"*

*ஜனாதிபதி சட்டத்தரணிகள் பட்டியலை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்திய ரணில், கட்சிகளுக்குள் சந்தேகங்கள் எழ வழிவகுத்துள்ளார். எவ்வாறாயினும், ரணில் துரோகத்துடன் செயற்பட்டார் என்று திட்டவட்டமாக கூற முடியாது. ஏனெனில் ஜனாதிபதி சட்டத்தரணி என்ற மதிப்பைப் பெறுவதற்கு அதற்கு ஆசைப்படுவோர் தாமாகவே விண்ணப்பிக்க வேண்டும். பெரும்பாலும் அந்த மதிப்பு விண்ணப்பங்கள் மூலமே வழங்கப்படுகின்றது. ரணில் விண்ணப்பங்களை உன்னிப்பாகப் பரிசீலனை செய்து மூலோபாய ரீதியாக நிலைமையை வழிநடத்தினார்.*

*திறமையை வெளிப்படுத்தி, எதிரிகளாகக் கருதப்படுபவர்களைக்கூட அங்கீகரிப்பவர் தான் என்ற பிம்பத்தை ஏற்படுத்த அவர் முயல்கிறார்.*

*சன் சூவின் 'ஆர்ட் ஆஃப் வார்' இலிருந்து 'எதிரிகளை ஒழிக்கும்' உத்தியை அவர் சேகரித்தாரா என்பது தெரியவில்லை.*


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
138, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# சீரற்ற காலநிலையால் 20 ஆயிரம் பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்தை நெருங்கியுள்ளது என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 5 ஆயிரத்து 682 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 202 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அதில், கிழக்கு மாகாணத்தில் மாத்திரம், 4 ஆயிரத்து 804 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 206 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஊவா மாகணத்தில் 761 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 586 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 3 வீடுகள் முழுமையாகவும், 361 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மழை மற்றும் மண்சரிவு காரணமாக பல வீதிகளின் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. அதன்படி, மாத்தளை உக்குவெல-பண்டாரபொலவீதி, மண்சரிவால் முற்றாக தடைப்பட்டுள்ளது.

மேலும் கண்டி -மஹியங்கனை பிரதான வீதியின் போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதுடன் ஹுன்னஸ்கிரிய பிரதேசத்தில் மண்மேடுசரிந்து வீழ்ந்தமையே இதற்குக் காரணம் எனப்; பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (05)

# கொழுப்பு நிதி நகரத்தில் தனியார் வைத்தியசாலை

## அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்புதுறைமுகநகரத்தில் தனியார் வைத்தியசாலையொன்றை நிர்மாணிப்பதற்கான முன்மொழிவிற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நாடாளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஆசிரி போர்ட் சிட்டி ஹொஸ்பிட்டல் (தனியார்) கம்பனியால் 100 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டின் கீழ் கொழும்பு துறைமுக நகரத்தில் வைத்தியசாலையொன்றை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்து-வதற்கு முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர (மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்களுக்காக விடுவித்தல் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குதல் தொடர்பான வழிகாட்டல்)

கட்டளைகளின் 2(ஆ) இன்கீழ் குறித்தகருத்திட்டத்தைவிடுவித்தல் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய, குறித்த ஏற்பாடுகளின் கீழ் விடுவித்தல் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்காகவும், குறித்த கருத்திட்டத்தை மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வணிகமாகவர்த்தமானி அறிவித்தல்விதியொன்றின் மூலம் வெளியிட்ட பின்னர், குறித்த விதியை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப் பதற்காக ஜனாதிபதியால் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது .(05)

# 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வருமான வரிக் கோப்பு அவசியம்

## இறைவரித் திணைக்களம் அறிவிப்பு

2024 ஜனவரி மாதம் முதல் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் உள்நாட்டுஇறைவரித்திணைக்களத்தின் பதிவு இலக்கமானரின் இலக்கத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் வரி செலுத்துவோருக்கான பதிவு இலக்கத்தை பெறாத நபர்களுக்கு 50,000 வரை அபராதம் விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் தேசிய அடையாள அட்டை இலக்கமொன்று இருப்பதை போலவே வருமான வரிக் கோவை இலக்கம் இருக்க வேண்டியதும் அவசியமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரி செலுத்தக்கூடிய அளவிலான வருமானம் இருக்குமாயின் அவர்கள் வரி செலுத்த வேண்டும் என்றும் அதற்காக அவர்களுக்கான வரிக் கோப்பும் திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒரு வருடத்தில் 12 லட்சம் ரூபாவுக்கு மேல் வருமானம் பெறும் நபர்கள்வருமானவரிக்கோப்பைதிறக்க வேண்டும்எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை, பொது மக்கள் இணையத்தில் பதிவு செய்யலாம், தபால் மூலமும் பதிவு செய்யலாம் அல்லது இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் நேரில் பதிவு செய்-யலாம்.

(05)

# ரயில், ஓட்டோ கட்டணங்கள் தொடர்பில் முக்கிய முடிவு

## அமைச்சர் பந்துல தகவல்



போக்குவரத்துத் துறை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரத்தை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துலகுணவர்தனதெரிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

ரயில், ஓட்டோ மற்றும் பாடசாலை போக்குவரத்து சேவைகளின் கட்டணங்கள் உட்பட போக்குவரத்துத் துறை தொடர்பான கட்டணங்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு வழங்குமாறு அமைச்சரவை பத்திரம் ஒன்றை செவ்வாய்க்கிழமைவழங்கியுள்ளேன்.

இதன்மூலம்நியாயமானவிலைக் கொள்கையை அங்கு ஏற்படுத்த முடியும். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)



# பருத்தித்துறை தீ விபத்து நேரில் சென்ற நீதிவான்

யாழ் -பருத்தித்துறை பகுதியில் உள்ள களஞ்சியசாலையொன்றில் செவ்வாய்க்கிழமை அதிகாலை ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் விபத்து இடம்பெற்ற இடத்துக்கு நேரில் சென்ற பருத்தித்துறை நீதிவான், அங்கு விசாரணைகளில் ஈடுபட்டார்.

இதேவேளை, தடயவியல் பொலிஸாரும் குறித்த பகுதியில் சோதனைநடவடிக்கைகளைமுன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# குற்றச் செயல்கள் குறித்து தகவல் தர விசேட இலக்கம்

விசேட சுற்றிவளைப்பு வேலைத் திட்டம் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வு பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது குற்றச் செயல்களில் ஈடுபடும் தரப்பினர் தொடர்பில் தகவல்களை வழங்குவதற்கு 0718598800 எனும் புதிய தொலைபேசி இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் குறித்த தொலைபேசி இலக்கங்கள் ஓட்டோக்களிலும் ஒட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# யாழில் தீவிரமடையும் டெங்கால் மூவர் இறப்பு

யாழ்.மாவட்டத்தில் கடந்த டிசெம்பர் மாதமே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த டிசெம்பர் மாதம் பெய்த தொடர்ச்சியான மழை காரணமாக யாழில் டெங்கு பரவல் அதிகரித்து வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த டிசெம்பர் மாதமே அதிகளவான டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளதுடன் , அவர்களில் மூவர் சிகிச்சைபலனின்றி உயிரிழந்துள்ளனர்.

குறிப்பாக யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசசெயலகபிரிவுக்குட்பட்ட இடங்களில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

எனவே பொதுமக்கள் தங்கள் உடல் நிலை தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் தம்மைச் சுற்றியுள்ள இடங்களையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# இலங்கைக்கான உயர் ஸ்தானிகராலயத்தை நியூசிலாந்தில் நிறுவ அமைச்சரவை அனுமதி

நியூசிலாந்தின் வெலிங்டனில் இலங்கைக்கான உயர் ஸ்தானிகராலயத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெளிவிகார அமைச்சர் அலி சப்ரி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நியூசிலாந்து மற்றும் இலங்கைக்கு இடையிலான இராஜதந்திரத் தொடர்புகளை மேலும் விருத்தி செய்து கொள்ளும் நோக்கில் நியூசிலாந்தின் வெலிங்டனில் இலங்கைக்கான உயர் ஸ்தானிகராலயத்தை நிறுவுவது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளதுடன், அதற்கமைய, நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெளிவிகார அமைச்சர் அலி சப்ரி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.01.2024இல் வெளியிடப்பெற்றது.